10/=

பக்கங்கள் 06

Registered as a Newspaper in Srilanka

# எதிரொலி

Ethiroli

குரல் 01 அதிர்வு 125 வெள்ளிக்கிழமை செப்ரெம்பர் 22 2017 ethirolimedia@gmail.com 021 300 48 48



## இலங்கை தொடர்பில் அதிக கவனம் செலுத்துவேன்

தமிழக முதலமைச்சராக தான் வெற்றி பெற்றால், இலங்கை மக்கள் தொடர்பிலும் அதிக கவனம் செலுத்தவுள்ளதாகக் கமல்ஹாசன் அறிவித்துள்ளார்.

விரைவில் அரசியல் கட்சி ஒன்றை ஆரம்பிப்பதன் மூலம் அடுத்து வரும் தமிழக முதல்வர்த் தேர்தலில் போட்டியிடவுள்ளதாகவும் அவர் அறிவித்துள்ளார். இந்தியா டுடே தொலைக்காட்சி சேவைக்கு வழங்கிய சிறப்புப் பேட்டியிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இலங்கைத் தமிழ் மக்கள் தொடர்பில் தமிழக அரசியல்வாதிகள் இதுவரை செயற்பட்டது போன்று அல்லாமல், அதற்கும் அப்பால் சென்று காத்திரமான நடவடிக்கை எடுப்பதாக அவர் உறுதியளித்துள்ளார். (எ)

# ஒன்றுடன் ஒன்று மோதி மூன்று டிப்பர்கள் விபத்து




## இருவர் படுகாயம்

மூன்று டிப்பர் வாகனங்கள் ஒன்றுடன் ஒன்று மோதி விபத்துக்குள்ளானதில் இருவர் படுகாயமடைந்துள்ளனர்.

இன்று காலை பரந்தன் பகுதியில் இடம்பெற்ற இவ் விபத்துச் சம்பவம் தொடர்பில் தெரியவருகையில்,

தர்மபுரம் பகுதியிலிருந்து மணல் ஏற்றியவாறு டிப்பர் ஒன்று பரந்தன் நோக்கி வந்துள்ளது. அதனை மறித்த கிளிநொச்சிப் பொலிஸார் சோதனை நடவடிக்கையினை மேற்கொண்டிருந்தனர்.

06

## மைத்திரி - ஹுசேன் இன்று சந்திப்பு



ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கும், ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் செயிட் ராட் அல் ஹுசேனுக்கும் இடையிலான முக்கிய சந்திப்பு இன்று இடம்பெறவுள்ளது.

நியூயோர்க்கில் உள்ள ஐ.நா. தலைமையகத்தில் இந்தச் சந்திப்பு இடம்பெறும். இலங்கையின் மனித உரிமைகள் நிலை, பொறுப்புக்கூறல் உள்ளிட்ட வாக்குறுதிகளை நடைமுறைப்படுத்தும் விவகாரம் உள்ளிட்டவை தொடர்பாக இந்தச் சந்திப்பின்போது முக்கிய கவனம் செலுத்தப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இலங்கை அரசாங்கம் நிலை மாறுகால நீதிப் பொறிமுறைகள் பற்றிய வாக்குறுதிகளை நிறைவேற்றுவதற்கும், நம்பிக்கையைக் கட்டியெழுப்பும் நடவடிக்கைகளையும் விரைவாக முன்னெடுக்க வேண்டும் என்று ஐ.நா. மனித உரிமை ஆணையாளர் அண்மையில் வலியுறுத்தியிருந்தார்.

அதேவேளை, இலங்கை அரசாங்கம் இந்த விடயங்களில் மெதுவான -ஆனால் உறுதியான நகர்வையே முன்னெடுக்கும் என்று ஐ.நா. பொதுச் சபையில் ஜனாதிபதி கூறியிருந்தார். நல்லிணக்கம், பொறுப்புக்கூறல் சார்ந்த முரண்பட்ட கருத்துக்களை இருவரும் வெளிப்படுத்தியுள்ள நிலையில் இன்றைய சந்திப்பு முக்கியத்துவம் வாய்ந்ததாகப் பார்க்கப்படுகிறது. (எ)

## ஜனவரியில் உள்ளூராட்சி மார்ச்சில் மாகாணசபை



### தேர்தல் அறிவிப்பு

“உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தல்கள் யாவும் எதிர்வரும் ஜனவரி மாதமும், பதவிக்காலம் நிறைவடையும் மாகாண சபைகளுக்கான தேர்தல், எதிர்வரும் மார்ச் மாதமும் நடைபெறும்” என்று உள்ளூராட்சி மற்றும் மாகாண சபைகள் அமைச்சர் பைஸர் முஸ்தபா தெரிவித்துள்ளார். மாகாணசபைத் தேர்தல்கள் (திருத்தச்) சட்டமூலம், மூன்றிலிரண்டு பெரும்பான்மை வாக்குகளால் நாடாளுமன்றத்தில் புதன்கிழமை இரவு நிறைவேற்றப்பட்டது. அந்தச் சட்டமூலம் தொடர்பில், ஊடகவியலாளர்களுக்குத் தெளிவுபடுத்தும் ஊடகச் சந்திப்பு, உள்ளூராட்சி மற்றும் மாகாண சபைகள் அமைச்சின் கேட்போர் கூடத்தில் நேற்று மாலை நடைபெற்றது. அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

“புதிய தேர்தல் முறையினூடாக, மக்கள் சேவையாற்ற ஆவல் கொண்டுள்ள புதியவர்களுக்கும் சந்தர்ப்பம் வழங்கப்படுகிறது. 20ஆவது திருத்தச்சட்ட மூலம் தொடர்பில் மூன்றிலிரண்டு பெரும்பான்மையை எமக்கு பெறக்கூடியதாக இருக்கின்ற போதிலும், சர்வஜன வாக்கெடுப்புக்குச் செல்வதற்கு அரசாங்கம் தீர்மானிக்கவில்லை. அதனால், மாகாண

06

## அர்ஜூன மகேந்திரன் இன்றும் ஆஜரானார்



மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர் அர்ஜூன மகேந்திரன் மூன்றாவது முறையாக இன்று பிணைமுறி மோசடி விசாரணை ஆணைக்குழு முன்னிலையில் விசாரணைக்காக ஆஜராகியுள்ளார்.

அதேவேளை, பிணைமுறி தொடர்பான குறிப்பிட்ட

06

## தேசிய விளையாட்டுவிழா இம்முறை அனுராதபுரத்தில்

வடக்கு, கிழக்கு உள்ளிட்ட நாட்டின் சகல மாவட்டங்களையும் பிரதிநிதித்துவப்படுத்தி 29ஆவது தேசிய இளைஞர் விளையாட்டு விழா இம்முறை அனுராதபுரத்தில் நடைபெறவுள்ளது.

தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார விவகார இராஜாங்க அமைச்சர் நிரோசன் பெரேரா தலைமையில் நடைபெறவுள்ள இவ் விளையாட்டு விழா எதிர்வரும் 27ஆம் திகதி முதல் 30ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது.

11 வருடங்களின் பின்னர் அனுராதபுரம் வட மத்திய மாகாண விளையாட்டு கட்டடத் தொகுதியில் நடைபெறும் இந்த விளையாட்டுப்போட்டியில் 3000 வீர வீராங்கனைகள் பங்குபற்றவுள்ளனர். 20 வயதுக்கு உட்பட்ட மற்றும் 20 வயதுக்கு மேற்பட்ட 2 போட்டி பிரிவுகளின் கீழ் நடைபெறவுள்ள இவ் விளையாட்டு விழாவில் தடகளப் போட்டிகளாக 64 போட்டி பிரிவுகள் கோலாகலமாக இடம் பெறவுள்ளது.

06

## யோசிதவின் பாட்டி விசாரணைக்கு அழைப்பு




யோசித ராஜபக்சவின் பாட்டி டெய்ஸி பொராஸ்ட்டுக்கு காவற்துறை நிதி குற்றத் தடுப்புப் பிரிவில் வாக்குமூலம் வழங்குமாறு கொழும்பு பிரதான நீதவான் இன்று உத்தரவு பிறப்பித்துள்ளார்.

தெஹிவளையில் 50 மில்லியன் ரூபா பெறுமதியான காணியுடனான வீடொன்றினை யோசித ராஜபக்ச தனது பாட்டியின் பெயரில் வாங்கியுள்ளார்.

குறித்த ஆடம்பரக் காணியுடனான வீட்டை வாங்குவதற்கு 50 மில்லியன் ரூபா பணம் எங்கிருந்து? எவ்வாறு பெற்றுக் கொள்ளப்பட்டது? என்பது தொடர்பில் எப்.சி.ஐ.டி. விசாரணைகளை நடாத்தி வருகின்றது.

06

தமிழர் தாயகத்தின் முதல் மாலைத் தினசரி

# சட்டமா அதிபருக்கு எதிராக நடவடிக்கை

சட்டமா அதிபரைப் பதவியிலிருந்து நீக்குமாறு கோரிப் பிரேரணையொன்றை சபாநாயகரிடம் சமர்ப்பிக்க கூட்டு எதிர்க் கட்சியினர் தீர்மானித்துள்ளனர்.

இலங்கை அரசியலமைப்பில் குறிப் பிடப்பட்டுள்ள 2002ஆம் ஆண்டின் 5ஆம் இலக்க அதிகாரிகளைப் பதவி நீக் கம் செய்யும் சட்டத்தின் கீழ் நாடாளு மன்றத்தில் பதவி நீக்க பிரேரணையை நிறைவேற்றுவதன் மூலம் சட்ட மா அதிபரை நீக்குவதற்கான அதிகாரம் நாடாளுமன்றத்துக்குள்ளது எனக்கூட்டு எதிர்க் கட்சியின் நாடாளுமன்ற உறுப் பினர் உதய கம்மன்பில தெரிவித்தார். (உ)

# பொலிஸ் குடியிருப்பு வீடமைப்பு நிர்மாணம்

காலி வெக்குகொட பிரதேசத்தில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட பொலிஸ் வீடமைப்புத்தொகுதி இன்று உத்தி யோகபூர்வமாக அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டுள்ளது.

அங்குரார்ப்பண விழாவில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க பிரதம அதிதியா கக் கலந்துகொண்டார். பொலிஸ் மா அதிபர் பூஜித் ஜயசுந்திர உள்ளிட்ட முக்கியஸ்தர்கள் பங்கேற்றனர்.

வெக்குகொட பொலிஸ் வீடமைப் புத் தொகுதி 100 குடியிருப்பு மனை களை உள்ளடக்கியதாகும். (உ)



# 'கிராம சக்தி' வேலைத்திட்டம்

## கிளிநொச்சியில் கலந்துரையாடல்

கிளிநொச்சி மாவட்டத்தில் 'கிராம சக்தி' வேலைத்திட்டங்களை முன்னெடுப்பது தொடர்பான தெளிவூட்டும் கலந்துரையா டல் ஒன்று இடம்பெற்றுள்ளது.

குறித்த கலந்துரையாடல் மாவட்ட அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம் தலைமையில் நேற்றுப் பிற்பகல் 3.30 மணி யளவில், மாவட்ட செயலக மண்டபத்தில் நடைபெற்றது.

ஜனாதிபதியின் விசேட வேலைத்திட் டத்தின் கீழ் நாடளாவிய ரீதியில் 'கிராம சக்தி' வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப் பட்டு வருகின்றன.

இதன்போது கருத்துத் தெரிவித்த அரச அதிபர், கிளிநொச்சி மாவட்டத்தில் கிராம சக்தி வேலைத் திட்டத்தின் கீழ் 20 கிராமங் கள் தெரிவுசெய்யப்பட்டு பல்வேறு அபி விருத்தி செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட் டுள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார்.

இந்தக் கலந்துரையாடலில் மேலதிக அரச அதிபர் எஸ்.சத்தியசீலன் மற்றும் கரைச்சி, கண்டாவளை, பூநகரி, பச்சிலைப் பள்ளி ஆகிய பகுதிகளின் பிரதேச செயலா ளர்கள், துறைசார் அதிகாரிகள் எனப் பல ரும் கலந்து கொண்டனர். (உ)

# 13 இற்கு மேம்பட்டால் யாப்பை வரவேற்போம்



தமிழ் மக்கள் தாம் இலங்கையர்க ளாகவும், தமிழர்களாகவும் இருப்பதற் காக உணர்வுகளுடன் இருந்ததை முன் னாள் தமிழ்த் தலைவர்களும், சிங்களத் தலைவர்களும் ஆரோக்கியமாக எடுத் துக்கொள்ளவில்லை. இதன் விளைவா கவே எமது நாடு வெறுக்கத்தக்க வன் முறைகளையும், பிரச்சினைகளையும் சந்திக்கும் நிலைமை ஏற்பட்டது என்று ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் செய லாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

புதிய அரசியலமைப்புக்கான இடைக் கால அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டபின் அது தொடர்பில் உரையாற்றிய அவர், எம்மைப் பொறுத்தவரை தேசிய இனப் பிரச்சினைக்கான புதிய அரசியல மைப்பானது, நாம் கடந்த 30 வருடங் களாக கோரிக்கைவிடுத்து வரும்13ஆவது திருத்தச் சட்டத்தை விடவும் மேம்பட் டதாக அமையுமாக இருந்தால் அதை வரவேற்போம். முக்கியமாக புதிய அரசியலமைப்பானது, மத்தியில் கூட் டாட்சி! மாநிலத்தில் சுயாட்சி!! என்ற கோட்பாட்டுக்கு அமைவாக, இலங்கைத் தாய் நாடு மதச்சார்பற்ற நாடாக இருக்க வேண்டும்.

குறிப்பாக வடக்கு, கிழக்கு மாகா ணங்களுக்கு சமச்சீரற்ற அதிகாரங்களை வழங்குவதாக அமையவேண்டும் என் றும், மேல் சபை அமையப்பெற வேண் டும் என்றும், அதில் சிறுபான்மை இனங் களின் பிரதிநிதிகள் ஐம்பதுக்கு ஐம்ப தாக இருக்க வேண்டும் என்றும், பொலிஸ் உட்பட முப்படைகளிலும் இன விகிதா சாரம் பேணப்படுவதை உறுதி செய்ய வேண்டும் என்றும் அரசியலில் பெண்க ளுக்கு சமபங்கு வழங்கப்பட வேண்டும் என்றும் வலியுறுத்தினார். (உ)

# கிழக்கு அபிவிருத்தி கலந்துரையாடல்



கிழக்கு மாகாணத்தில் அபிவிருத்தித் திட்டங்களைச் சிறப்பாக மேற்கொள்வ தற்கும், எதிர்காலத்தில் இன்னும் பல பிர தேசங்களில் அதிகமாக சுகாதார சேவை களை மேற்கொள்வதற்கான திட்டங்களுக் கும் அதிக நிதி ஒதுக்கீடு மேற்கொள்ளவேண் டும் என்று கிழக்கு மாகாண சுகாதார அமைச் சர் ஏ.எல். முஹம்மட் நஸீர் தெரிவித்தார்.

கிழக்கு மாகாண சுகாதார அமைச்சின் ஊடாக கடந்த காலங்களில் மேற்கொள்ளப் பட்ட அபிவிருத்தித் திட்டங்கள் தொடர் பில் ஆராயும் கூட்டம் கிழக்கு மாகாண சுகாதார அமைச்சில் இடம்பெற்றது.

கிழக்கு மாகாண சுகாதார அமைச்சி னால் ஒதுக்கப்பட்ட நிதிகள் பிராந்தியங்கள் ரீதியாக எவ்வாறு பயன்படுத்தப்பட்டன என்பது தொடர்பிலும், அதற்கான அபி விருத்தித் திட்டங்கள் தொடர்பாகவும், மேலும் செயற்படுத்தப்படவுள்ள அபிவிருத்தி நிலைப் பாடுகள் தொடர்பாகவும் இந்தக் கூட்டத் தின்போது கலந்துரையாடப்பட்டது. (உ)

# இந்துவின் மைந்தர்களின் இரத்ததான நிகழ்வு






தியாகி திலீபன் நினைவு நாளை முன் னிட்டு யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் இளைஞர் அணியினரால் இரத்த தான நிகழ்வு மேற்கொள்ளப்பட்டுவருகின்றது. அதன் முதல் இரத்த தான நிகழ்வு இன்று கண்டி வைத்தியசாலையில் நடைபெற்றது. காலை முதல் பலர் இரத்ததானம் செய்து வருகின்றனர் எனக் கண்டி நிகழ்வின் ஒருங் கிணைப்பாளர் குறிப்பிட்டார்.

இதேவேளை, நாளை பதுளையிலும் நாளை மறுதினம் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியிலும் குறித்த இரத்ததான நிகழ்வு மேற்கொள்ளப்படவுள்ளது.

குறித்த இரத்ததான நிகழ்வுகளில் இந் துக் கல்லூரி சமூகம் சார்ந்தவர்கள் மட்டு மன்றி தமிழ்த் தேசிய உணர்வாளர்களும் பங்கேற்குமாறு ஏற்பாட்டாளர்கள் அறி வித்துள்ளனர். (உ)

# தண்டவாளம் சேதம் ரயில் சேவை பாதிப்பு



பண்டாரவளை கொலத்தென்னே எனுமிடத்தில் தண்டவாளத்தில் சிமெந்து பாரவூர்தியொன்று பயணித்த மையினால் தண்டவாளத்தில் சேதம் ஏற்பட்டுள்ளது. இதனால் ரயில் சேவை கள் பாதிப்படைந்துள்ளன.

கொழும்பிலிருந்து வெலிமடைக் குக்குச் சிமெந்து ஏற்றிக்கொண்டு பய ணித்தபோதே, இவ்வனர்த்தம் இன்று காலை ஏற்பட்டுள்ளது.

இந்த அனர்த்தத்தினால், தண்ட வாளத்துக்கு ஏற்பட்ட சேதங்களை சீர்செய்வதற்கு, நடவடிக்கை எடுக் கப்பட்டுள்ளதாகப் பண்டாரவளை பொலிஸார் தெரிவித்தனர். (உ)

# கின்னஸில் இடம்பிடித்த பூனைகள்



அமெரிக்காவின் மிச்சிகன் பகுதியில் வசிக்கும் லாரன், வில் பவர்ஸ் தம்பதியர் பூனைகளை வளர்த்து வருகிறார்கள். இவற்றில் சிக்னஸ் என்ற பூனையின் வால் உலகிலேயே மிக நீளமான வாலுடைய வீட்டுப் பூனை இதுவாகும். வாலின் நீளம் 18.4 அங்குலம். "சிக்னஸூக்கு 2 வயதாகிவிட்டது. பிறந்ததிலிருந்தே இயல்பான பூனைகளைவிட இதன் வால் மிக நீளமாக இருந்தது. இந்தப் பூனையின் சகோதரனுக்கு வால் சாதாரணமாகத்தான் இருக்கிறது. காரணம் தெரிய வில்லை. ஒரு கட்டத்தில் பூனையின் வால் அளவுக்கு அதிகமாக வளர ஆரம்பித்தது. அதற்குப் பிறகே சிக்னஸின் வாலை, பாதுகாக்க ஆரம்பித்தோம். கதவு பின்னால் ஒளிந்துகொள்ளும்போது வால் கதவில் சிக்கிவிடும். உயரமான இடத்திலிருந்து குதிக்கும்போது வாலுக்கு என்ன ஆகுமோ என்ற பயம் வந்துவிடும். இவனைக் கண்காணிப்பதே ஒரு பெரும் வேலையாக மாறிவிட்டது. சென்ற வருடம் ஜூன் மாதம் கின்னஸ் நிறுவனத்திலிருந்து வந்து சிக்னஸின் வாலை அளந்தனர். 17.58 அங்குல நீளம் இருந்தது. தற்போது 18.4 அங்கு லமாக வளர்ந்துவிட்டது. மாதந்தோறும் வளர்ச்சி தெரிகிறது. உலகிலேயே மிக நீளமான வாலுடைய வீட்டுப் பூனை இது தான் என்றும் சிக்னஸின் சகோதரன் ஆர்க்டூரஸூம் 'உலகின் மிக உயரமான வீட்டுப் பூனை' என்ற பட்டத்தையும் கின்னஸ் நிறுவனம் வழங்கியுள்ளது. ஒரே நேரத்தில் இரண்டு கின்னஸ் சாதனைகள் நிகழ்ந்திருப்பது குறித்து எங்களுக்கு மட்டற்ற மகிழ்ச்சி" என்று லாரன் தெரிவித்துள்ளார்.

# குஷ்பு அதிரடி

'காங்கிரசுக்கு வாருங்கள் என்று கமல்ஹாசனை அழைக்க மாட் டோம்' என குஷ்பு கூறியுள்ளார். அவர் தெரிவிக்கையில், நடிகர் கமல்ஹாசன் ஏற்கனவே கேரள முதலமைச்சரைச் சந் தித்து இருக்கிறார். தற்போது டெல்லி முதலமைச்சரைச் சந் தித்து இருக்கிறார். ஒரு முதல மைச்சரையே அவரை தேடிப் போய் சந்தித்து இருப்பதால், கமல்ஹாசனின் 30 ஆண்டுகால தோழி என்ற முறையில் எனக்கு பெருமையாக உள்ளது. கமல்ஹாசன் வேறு கட்சியில் சேருவதும், புதிய கட்சியைத் தொடங்குவதும் அவரது விருப் பம். காங்கிரசுக்கு வாருங்கள் என்று அவரை நாங்கள் அழைக்க மாட்டோம். காங்கிரஸ் குஷ்புவை நம்பியோ, கமலை நம்பியோ, ரஜினிகாந்தை நம்பியோ இல்லை. தனது கொள்கையை நம்பித் தான் இருக்கிறது. கமல்ஹாசன் தனிக்கட்சி தொடங்கினாலோ அல்லது ரஜினிகாந்த் கட்சி தொடங்கி னாலோ அதில் நான் சேரமாட் டேன். அரசியலே வேண்டாம் என்று விலகினாலும், விலகுவேனே தவிர, இனி வேறு கட்சியில் சேர மாட்டேன். அரசியலில் தான் பேரும், புகழும் நான் அடைய வேண்டும் என்பதில்லை. ஏற்கனவே பணம், புகழ் எல் லாவற்றையும் பார்த்தவள் நான். எனக் கூறியுள்ளார்.

# அணு ஆயுதத் தடை ஒப்பந்தம்



மறுக்கும் வல்லரசு நாடுகள்

இந்த பூமிப் பந்தில் பேரழிவை உருவாக்கவல்ல ஆயுதங்களில் முதன்மையானவை அணு ஆயுதங் கள். இந்த ஆயுதங்களை ஏராளமான அளவில் வல்லரசு மற்றும் வளரும் நாடுகள் வைத்திருக்கின் றன. தற்போதைய நிலையில் 15 ஆயிரம் அணு ஆயுதங்கள் உலகில் இருப்பதாக நம்பப்படுகிறது. 2 ஆம் உலகப்போரில் ஜப்பான் மீது அமெரிக்கா வீசிய 2 அணுகுண்டுகள் ஏற்படுத்திய பேரழி வைப் பார்த்து அதிர்ந்து போன உலக நாடுகள், அணு ஆயுதவிவகாரத்தில் மிகுந்த எச்சரிக்கை யைக் கடைப்பிடிக்கின்றன.

எனவே அணு ஆயுதங்களுக்குத் தடை விதிக் கும் நோக்கில் புதிய ஒப்பந்தம் ஒன்றை ஐ.நா. சபை தயாரித்துள்ளது. இந்த ஒப்பந்தத்தில் கையெழுத்து இடும் நாடுகள் எந்த சூழ்நிலை யிலும் அணு ஆயுதங்களைத் தயாரித்தல், சோதித் தல், விற்பனை செய்தல், பிற நாடுகளிடம் இருந்து கொள்முதல் செய்தல், வைத்திருத்தல் போன்ற நடவடிக்கைகளில் ஈடுபட முடியாது.

இந்த ஒப்பந்தத்தின் அவசியத்தை சமீபத்தில் விளக்கிய ஐ.நா. பொதுச்செயலாளர் ஆன்டனியோ குட்டரெஸ், அணு ஆயுதம் இல்லா ஒரு உலகத்தை உருவாக்குவதற்கான நோக்கத்திலே இது ஒரு முக்கியமான படிநிலை எனக் குறிப்பிட்டார். இந்த ஒப்பந்தத்தில் 50 நாடு கள் கையெழுத்திட்டால் மட்டுமே அதனை நடைமுறைப்படுத்த முடியும்.

இவ்வாறு ஒப்பந்தத்துக்கு ஆதரவாகச் சிறிய நாடுகள் ஒருபுறம் அணிவகுத்து நிற்க, அணு ஆயுதங்களை வைத்திருக்கும் அமெரிக்கா, பிரான்ஸ் போன்ற வல்லரசு நாடுகளும், அவற்றின் நட்பு நாடுகளும் இந்த ஒப்பந்தத்தைப் புறக்கணித்து வருகின்றன. இந்த விவகாரத்தில் தடை நடவடிக்கை மூலம் எந்த நன்மையும் ஏற்படாது எனவும் அவை எதிர்ப்புத் தெரிவித்துள்ளன. ஆனால் உலகில் தார்மீக தலைமைத்துவத்தை வெளிப்படுத்தும் நாடுகள் இதுபோன்ற கொள்கை முடிவுகளை ஏற்பதன் மூலம் தார்மீக தலைமைத்துவம் பெற்றிருத்தல் அவசியம் என அணு ஆயுத ஒழிப்புக்கான சர்வதேச பிர சாரத்துக்கான செயல் இயக்குனர் பியாட்ரிஸ் பின் கூறியுள்ளார்.

# 70 ஆயிரம் கோடி டொலர் செலவு

அமெரிக்கப் பாதுகாப்புத் துறைச் செல வுக்காக 70 ஆயிரம் கோடி டொலரை ஒக்ரோபர் முதலாம் திகதி தொடங்கும், வரும் நிதியாண்டுக்கு ஒதுக்குவதற்கான மசோதாவுக்கு அமெரிக்க நாடாளுமன் றத்தின் செனட் சபை ஒப்புதல் அளித் துள்ளது.

இந்தியா - அமெரிக்கா பாதுகாப்புத் துறை ஒத்துழைப்புக்கு வியூகம் உருவாக் குதல், ஹக்கானி அமைப்பு, லஷ்கர் தொய்பா போன்ற தீவிரவாத அமைப் புகளுக்கு எதிரான பாகிஸ்தான் நடவ டிக்கைகள் விடயத்தில் கடுமையான அணுகுமுறையைக் கையாளுதல் ஆகியவற்றுக்கு இந்த மசோதா வழி செய்துள்ளது. தேசிய பாதுகாப்பு ஒப்புதல் சட்டம் 2018 இன் ஒரு பகுதியாக இந்த மசோதா நிறைவேற் றப்பட்டது. இதற்கு ஆதரவாக 89 வாக்குகளும், எதிராக 8 வாக்குகளும் கிடைத்தன.

வட கொரியாவின் அணு ஆயுதத் திட்டங்களால் அமெரிக்கா மற்றும் அதன் நட்பு நாடுகளுக்கு அச்சுறுத்தல் அதிகரித்த நிலையில், இந்த மசோதா வில் அமெரிக்க ஏவுகணைப் பாதுகாப் புத் திட்டத்தை வலுப்படுத்துவதற்காக 850 கோடி டொலர் ஒதுக்கப்பட்டுள் ளது. இது ட்ரம்ப் கோரியதை விட அதி கமாகும்.

# உலக அடிமைத்தனத்திலே 4 கோடி பேர்

உலகளவில் 4 கோடி பேர் நவீன அடிமைத்தனத்தில் சிக்கித் தவிக் கின்றனர். 15 கோடிக்கும் மேற் பட்ட குழந்தைத் தொழிலாளர்கள் இதிலே அடங்கியுள்ளனர். சர்வதேசத் தொழிலாளர் அமைப்பு மற்றும் சர்வதேச புலம்பெயர்வு அமைப்பு ஆகியவை இணைந்து, உலகளவில் அடிமைத்தனத்தில் சிக்கி உள்ளவர்கள் மற்றும் குழந் தைத் தொழிலாளர்களின் நிலை குறித்து நடத்திய ஆய்வு அறிக்கை ஐ.நா. பொதுச் சபைக் கூட்டத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை வெளி யிடப்பட்டது. அதிலே, உலகளவில் அடிமைத்தனத்தில் சிக்கிய 4 கோடி பேரிலே 2.90 கோடி பேர் பெண் கள் மற்றும் சிறுமிகள் ஆவர். இன்னும் 15.2 கோடி அளவுக்கு குழந்தைத் தொழிலாளர்கள் உள்ளனர். இவர்களில் 7.21 கோடி பேர் ஆபிரிக்காவிலும் அதற்கடுத்த நிலைகளில் ஆசியா, பசிபிக்கிலும் வசிக்கின்றனர். நவீன கால அடி மைத்தனத்தில் சிக்கிய 4கோடி பேரில் ஒருவர் குழந்தை தொழிலா ளராகவும் இருக்கிறார் என்று அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

ஐ.நாவில் அறிக்கை வெளியிடப்பட்டது



# ருவிட்டர் நிறுவனத்தின் மூத்த இயக்குநராக ஶ்ரீராம் கிருஷ்னன்



முன்னணி சமூக வலைதளமான ருவிட்டர் நிறுவனத்தின் மூத்த இயக்குநராக இந்தியாவைச் சேர்ந்த ஶ்ரீராம் கிருஷ்ணன் நியமனம் செய்யப்பட்டுள்ளார். இவர் இதற்கு முன்பு ஃபேஸ்புக் மற்றும் ஸ்நாப்சாட் நிறுவனங் களில் முக்கிய பொறுப்புகளை வகித்துள்ளார்.

இது குறித்து ருவிட்டரில் குறிப் பிட்டுள்ள ஶ்ரீராம் கிருஷ்ணன், மிகச்சிறந்த குழுவுடன் பணியாற்ற உள்ளேன் என கூறியுள்ளார். சிலிகான் பள்ளத்தாக்கில் முக்கிய தலைவராக உள்ள ஶ்ரீராம், தொழில்நுட்ப துறை யில் மிக சிறப்பான பங்களிப்பை செலுத்தி வருகிறார். இவரது வருகை குறித்து ருவிட்டர் நிறு வனத்தின் தலைமைச் செயல் அதிகாரி ஜாக் டோர்சே, ஹவெல் கம் ஹோம்' என திங்கட்கிழமை ருவிட் செய்துள்ளார்.

# இறந்தவர் மீண்டும் உயிருடன்

பிரான்சில் பரபரப்பு

பிரான்ஸ் நாட்டில் உயிரிழந்துவிட்ட தாகச் சட்டபூர்வ மாக அறிவிக்கப் பட்ட நபர் ஒரு வர் தான் உயி ரோடு இருப்பதாக நீதிமன்றத்தில் வழக்குப் பதிவு செய்துள்ளார். பிரான்ஸ் நாட்டில் உள்ள டாரன் நகரில் லூயிஸ் என்பவர் வசித்து வருகிறார்.

கடந்த மே மாதம் இவரது வீட்டுக்கு அருகில் உயிரிழந்த சடலம் ஒன்று கண்டுபிடிக் கப்பட்டது. பிரேத பரிசோதனையின் முடிவில் வீட்டில் குடியிருந்த லூயிஸ் தான் உயிரிழந்துவிட்டார் என அதிகாரபூர்வமாக அறிவிக்கப்பட்டது. ஆனால், வெளியூர் சென்றுருந்த லூயிஸ் திரும்ப வந்தபோது அரசாங்க அறிவிப்பைக் கேட்டு அதிர்ச்சி அடைந்துள்ளார். இது தொடர்பாகப் பொலி ஸாரிடம் புகார் அளித்த போது மீண்டும் விசாரணை நடத்தப்பட்டது. அப்போது, வீட்டிற்கு அருகில் உயிரிழந்தவர் வீடில்லாத பிச்சைக்காரர் எனத் தெரியவந்துள்ளது. எனினும், தான் உயிரோடு இருப்பதை லூயி சால் நிரூபிக்க முடியவில்லை. இதனால் லூயிசுக்குக் கிடைத்த அனைத்து அரச சலுகைகளும் முற்றிலுமாக நிறுத்தப் பட்டன. அரசாங்க அதிகாரிகளின் செயற் பாடுகளால் அதிருப்தி அடைந்த லூயிஸ் தான் உயிரோடு இருப்பதாகத் தற்போது நீதிமன்றத்தில் வழக்குப் பதிவு செய்துள் ளார். இந்த வழக்கின் விசாரணை நேற்று நீதிமன்றத்துக்கு வந்தபோது சில ஆவணங் களை ஒப்படைக்க வேண்டும் எனக் கூறி அடுத்த மாதத்திற்குத் தீர்ப்பை நீதிபதிகள் ஒத்திவைத்துள்ளனர். அரசாங்க அதிகாரிகள் மிகவும் தாமதமாகச் செயற்பட்டு வருவதால் தான் இவ்வழக்குத் தொடர்ந்து நீடித்துச் செல் வதாக லூயிஸ் வேதனை அடைந்துள்ளார்.



# வெற்றிக்குக் கிடைத்த பரிசு

ஆஸ்திரேலிய அணியுடனான ஒருநாள் தொடரில் 2-0 என்ற கணக்கில் முன்னிலை பெற்றுள்ள இந்திய அணி, சர்வதேச ஒருநாள் கிரிக்கெட் தரவரிசையில் முதலிடத்தைப் பிடித்துள்ளது.


ஆஸ்திரேலியா அணி, இந்தியாவுடன் ஒருநாள் மற்றும் இருபது-20 போட்டிகளில் விளையாடிவருகிறது.

இதில், முதல் ஒருநாள் போட்டியை இந்தியா வென்ற நிலையில்,நேற்று கொல்கத்தாவில் நடைபெற்ற இரண்டாவது போட்டியிலும் இந்திய அணி 50 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றிபெற்றது.

இதனால், ஐந்து ஒருநாள் போட்டிகளில் 2-0 என்ற கணக்கில் இந்திய அணி முன்னிலை வகிக்கிறது. இந்நிலையில், சர்வதேச ஒருநாள் போட்டிக்கான தரவரிசையில் இந்தியா முதலிடத்தைப் பிடித்துள்ளது.

முதல் இடத்தில் இருந்த தென்னாபிரிக்காவை விட 19 புள்ளிகள் இந்தியா பின்தங்கியிருந்த நிலையில், நேற்றைய வெற்றியின் மூலம் இந்தியா தென்னாபிரிக்காவைப் பின்னுக்குத் தள்ளி முதலிடத்தைப் பிடித்துள்ளது. டெஸ்ட் தரவரிசையிலும் இந்தியா முதலிடத்தில் உள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# சாதனைகளின் உச்சத்தில் 'மெர்சல்' டீசர்



அட்லி இயக்கத்தில் விஜய் நடித்து வரும் 'மெர்சல்' படத்தின் டீசர் நேற்று மாலை 6 மணிக்கு வெளியானது. டீசர் வெளியான சில நிமிடங்களிலேயே அதிகமானோரால் பார்க்கப்பட்டது. இன்று காலை வரை 'மெர்சல்' டீசரை ஒரு கோடி பேர் வரை பார்த்து ரசித்துள்ளனர்.

'மெர்சல்' டீசரை இதுவரை 7 இலட்சத்துக்கும் அதிகமானோர் லைக் செய்துள்ளனர். இதற்கு முன்னதாக அஜித்தின் 'விவேகம்' படத்தின் டீசர் உலகளவில் அதிக லைக்குகளைப் பெற்ற டீசர் என்ற பெருமையைப் பெற்றிருந்தது. தற்போது அந்த சாதனையை 'மெர்சல்' டீசர் முறியடித்துள்ளது. இந்த லைக் மேலும் உயரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

'விவேகம்' படத்தின் டீசரை இதுவரை 5 இலட்சத்து 99 ஆயிரம் பேர் லைக் செய்துள்ளனர். அது மாத்திரமின்றி 'விவேகம்' டீசர் 15 நிமிடங்களில் ஒரு இலட்சம் லைக்குகளைக் கடந்தது. ஆனால், மெர்சல் டீசர் வெளிவந்த 11ஆவது நிமிடத்தில் ஒரு இலட்சம் லைக்குகளைக் கடந்து புதிய சாதனையைப் படைத்துள்ளது.

ஸ்ரீ தேனாண்டாள்பிலிம்ஸ்நிறுவனத்தின்100ஆவது படமாக உருவாகி வரும் இந்தப் படத்துக்கு ஏ.ஆர். ரகுமான் இசையமைத்திருக்கிறார். எஸ்.ஜே. சூர்யா முக்கிய கதாபாத்திரத்தில் நடித்திருக்கிறார். சமந்தா, காஜல் அகர்வால், நித்யா மேனன் ஆகியோர் விஜய்க்கு ஜோடியாக நடித்துள்ளனர்.

தீபாவளிப் பண்டிகையை முன்னிட்டு 'மெர்சல்' வெளியாகவுள்ளது. (ஐ)





# கடைசி நிமிடத்தில் அதிர்ச்சி!

ஸ்பெய்னில் நடைபெற்று வரும் 'லா லிகர் உதைபந்தாட்டத் தொடரில் ரியல்மாட்ரிட் அணி அதிர்ச்சித் தோல்வியடைந்துள்ளது.

ஸ்பெயினில் புகழ்பெற்ற லா லிகா உதைபந்தாட்டத் தொடர் அங்குள்ள நகரங்களில் நடந்து வருகிறது. 20 அணிகள் பங்கேற்றுள்ள இத்தொடரில் நேற்றுமுன்தினம் இரவு நடந்த ஆட்டம் ஒன்றில் கிறிஸ்ரியானோ ரொனால்டோ உள்ளிட்ட நட்சத்திர வீரர்களை உள்ளடக்கிய நடப்புச் சம்பியன் ரியல்மாட்ரிட் அணி, ரியல் பெட்டிஸ் அணியை எதிர்கொண்டது.

மிகவும் விறுவிறுப்பாக நடைபெற்ற இந்த மோதலில் ரியல் பெட்டிஸ் அணி, கடைசி நிமிடத்தில் கோல் ஒன்றைப் போட்டு ரியல்மாட்ரிட்டுக்கு அதிர்ச்சியளித்தது.

பெட்டிஸ் அணியின் வெற்றிக்குரிய கோலை அன்டோனியா சனப்ரியா தலையால் முட்டி அடித்தார். 5 கழகப் போட்டிகளில் பங்கேற்ற விதிக்கப்பட்டிருந்த தடை நீங்கிய பின்னர் ரியல்மாட்ரிட் வீரர் கிறிஸ்டியானோ ரொனால்டோ அணிக்குத் திரும்பிய போதிலும் அந்த அணிக்கு ஏமாற்றமே மிஞ்சியது. கடந்த 74 ஆட்டங்களில் ரியல்மாட்ரிட் அணி கோல் அடிக்காத ஆட்டம் இது தான்.

நடப்புப் பருவகாலத்தில் ரியல் மாட்ரிட் அணி 5 ஆட்டங்களில் விளையாடி 2 வெற்றிகள், 2 சமநிலைகள் மற்றும் ஒரு தோல்வி என்று 8 புள்ளிகளுடன் 7ஆவது இடத்தில் உள்ளது. தோல்வியே சந்திக்காத பார்சிலோனா அணி 5 வெற்றிகளுடன் (15 புள்ளிகள்) முதலிடம் வகிக்கிறது. (ஐ)

# திக்கம் இளைஞர், சென். சேவியர் வெற்றி





மணற்காடு சென். அன்ரனிஸ் விளையாட்டுக்கழகம் நடத்தும் உதைபந்தாட்டத் தொடரில், நேற்று நடைபெற்ற ஆட்டங்களில் திக்கம் இளைஞர் மற்றும் சென். சேவியர் கழகங்கள் வெற்றிபெற்றன.

சுனாமியால் இறந்தவர்களினதும் கழகத்தின் மறைந்த வீரர்களினதும் நினைவான மணற்காடு சென். அன்ரனிஸ் விளையாட்டுக் கழகம் உதைபந்தாட்டத் தொடரை நடத்தி வருகிறது.

இதில் நேற்று நடைபெற்ற முதலாவது போட்டியில் திக்கம் இளைஞர் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து யாழ்.சென். அன்ரனிஸ் விளையாட்டுக் கழகம் மோதியது. இந்த ஆட்டம் 2:2 என்ற கோல் கணக்கில் சமநிலையில் முடிந்தமையால் 'பனால்டி' உதை வழங்கப்பட்டது.

இதில் திக்கம் இளைஞர் விளையாட்டுக் கழகம் 4:2 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

பின்னர் நடைபெற்ற இரண்டாவது ஆட்டத்தில், சென். சேவியர் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து யங்கமன்ஸ் விளையாட்டுக் கழகம் மோதியது.

இந்த ஆட்டத்தில் 2-1 கோல் கணக்கில் சென். சேவியர் கழகம் வெற்றி பெற்றது. (ஐ)

# அரசியல் பிரவேசம் உறுதி!



சமீப காலமாக தமிழக அரசியலில் பல மாற்றங்கள் ஏற்பட்டு வருகின்றன. அந்த வரிசையில் ரஜினி, கமல் போன்றவர்கள் அரசியலுக்கு வருகிறார்கள் என்ற பரபரப்புச் செய்திகளும் வந்து கொண்டிருக்கின்றன.

இந்நிலையில் நடிகர் கமல்ஹாசன் தொலைக்காட்சிக்கு ஒன்றுக்குப் பரபரப்புப் பேட்டி ஒன்றைக் கொடுத்துள்ளார்.

அதில், "அரசியலுக்கு வருவது உறுதி, தமிழக மக்களுக்காக முதல்வராக விரும்புகிறேன். மக்களின் ஒத்துழைப்பின்றி எதையுமே செய்ய முடியாது. நான் அவர்களுக்காக உதவ நினைப்பதில் பாதியைக் கூட நிறைவேற்ற முடியாதா? என்னைப் பொறுத்தவரையில் நான் பகுத்தறிவாளன். நான் மக்களுக்கு உதவுவதற்காக எந்த அளவுக்கு வேண்டுமானாலும் கீழே இறங்கிச் செல்லத் தயாராக இருக்கிறேன். நான் மக்களுக்காக உதவும் ஒரு கருவி. அதைத் தவிர வேறு ஒன்றும் சொல்வதற்கில்லை" என்று கூறியுள்ளார்.

இதற்கிடையில் கமல்ஹாசனின் இளையமகள் அக்ஷராஹாசன், நேற்று சென்னை விமான நிலையத்துக்குச் சென்று டில்லி அரசியலில் பெரும் பரபரப்பை ஏற்படுத்திய அரசியல்வாதியான அரவிந்த் கெஜ்ரிவாலை வரவேற்றார். பின்னர் அனைவரும் சென்னை ஆழ்வார்பேட்டையில் உள்ள கமல்ஹாசன் வீட்டுக்குச் சென்றனர். அங்கு கமல்ஹாசனை கெஜ்ரிவால் சந்தித்து பேசினார். இந்தச் சந்திப்பு அரசியல் முக்கியத்துவம் வாய்ந்ததாக கருதப்படுகிறது. (ஐ)

# இன்றைய கருத்தோவியம்




நன்றி - அத தெரண

# அடுத்த வாரம் அதிக நெருக்கடி கொடுப்போம்

மாலபே சைட்டம் நிறுவனத்தை மூடுவதற்கு நடவடிக்கை எடுக் கப்படாவிட்டால் அடுத்த வாரங் களில் கடுமையான நடவடிக் கைகளை மேற்கொள்ளவுள்ள தாக அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தின் செயலாளர் வைத்தி யர் ஹரித அளுத்கே தெரிவித் துள்ளார். மாலபே சைட்டம் நிறு வனத்துக்கு எதிராக நேற்றுக் காலை 8 மணிக்கு ஆரம்பிக் கப்பட்ட அரச வைத்திய அதிகாரிகளின் பணிப்புறக் கணிப்புப் போராட்டம் இன்று காலை 8 மணிக்கு நிறைவடைந் துள்ளது.
இது தொடர்பில் ஊடகங்களுக் குக் கருத்துத் தெரிவித்த அவர், நேற்றைய பணிப்புறக்கணிப்பு நிறைவடைந்தாலும் மாலபே சைட்டம் நிறுவனத்தை மூடும்வரை யில் போராட்டங்கள் விரிவுபடுத் தப்பட்டு மேற்கொள்ளப்படும் எனத் தெரிவித்தார். (உ)

## உங்களுக்கென ஒரு இலட்சியத்தை வகுத்துக்கொள்ளுங்கள்



மாணவர்கள் ஒவ்வொருவரும் உங்களுக்கென ஒரு இலட்சியத்தை, இலக்கை வகுத்துக்கொண்டு அதனை நோக்கிப் பயணிக்க வேண்டும், ஆசிரியர்கள் உங்களுக்கு வழிகாட்டுவார்கள் என வடக்கு மாகாணக் கல்வி அமைச்சர் க.சர் வேஸ்வரன் தெரிவித்துள்ளார்.
நேற்றுக் கிளிநொச்சி சிவபாத கலையக பாடசாலையில் இடம் பெற்ற பாடசாலையின் முதலா வது பரிசளிப்பு விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட அவர், வடக்கு மாகாணத்தின் கல்வித் தரத்தை உயர்த்துவதற்கு பல்வேறு முயற்சிகளையும் நடவ டிக்கைகளையும் மேற்கொண்டு வருகின்றோம், அதன் முன்னோ டியாக பன்னிரண்டு வலயங்களி லும் உள்ள பாடசாலைகளை ளின் அதிபர்களை வலயம் தோறும் சந்தித்து நிலைமைகளை அறிந்துகொண்டிருக்கின்றோம் எனவும் தெரிவித்தார். (உ-13)

# இலங்கை - பாக். இராணுவ அதிகாரிகள் சந்திப்பு

இலங்கைக்குப் பயணம் மேற்கொண்டுள்ள பாகிஸ் தான் இராணுவ உயர்மட்ட அதிகாரிகள் இலங்கை இராணுவ பதவி நிலை அதிகாரி மேஜர் ஜெனரல் அமல் கருணாசேகரவை சந்தித்தனர்.
பாகிஸ்தான் மற்றும் இலங்கைக்கு இடையிலான பாதுகாப்புப் படையினர்களுக்கான நான்காவது தடவை இடம்பெறும் பேச்சுவார்த்தை தொடர் பில் இராணுவ தலைமையகத்தில் நேற்று இந்த சந்திப்பு இடம்பெற்றது. பாகிஸ்தான் இராணு வத்தைச் சேர்ந்த மேஜர் ஜெனரல் ஹபீஸ் உர் ரஹ்மான, பிரிகேடியர் சையத் இம்ரான் அக் தர், கேணல் சஜாட் அலி உள்ளிட்ட அதிகாரிகள் கலந்துகொண்டு பாதுகாப்பு தொடர்பான முக்கிய விடயங்கள் தொடர்பில் கலந்துரையாடினர்.
பேச்சுவார்த்தைக்கு வருகை தந்த பாகிஸ்தான் இரா ணுவ பிரதிநிகளுக்கு மேஜர் ஜெனரல் அமல் கருணா சேகர தனது வாழ்த்துக்களைத் தெரிவித்தார்.
இந்தச் சந்திப்பை நினைவுகூரும் வகையில் இரு தரப்பினருக்கும் இடையில் நினைவு சின்னங்கள் பரிமாறப்பட்டன. (உ)

# 7.9 சதவீதமாக பணவீக்கம் அதிகரிப்பு

2017 ஒகஸ்ட் மாதத்துக்கான தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண் அடிப்படையில் பணவீக்கமானது 7.9 சதவீதமாக அதிகரித்துள்ளது.
இவ்வருடம் ஜூலை மாதத்தில் 6.3 சதவீதத்திலிருந்து ஒகஸ்ட் மாதம் 7.9சதவீதமாக பணவீக்கம் அதிகரித்துள்ளதாக தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத்திணைக் களம் வெளியிட்டுள்ள அறிக் கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.
2016 ஒகஸ்ட் மாதத்தில் நிலவிய குறைந்த விலை மட்டங்களே பணவீக்கத்தில் அதிகரிப்பு பதிவா கியமைக்கான பிரதான காரண மாகும் என்றும் புள்ளிவிபரத் திணைக்களம் அந்த அறிக்கை யில் குறிப்பிட்டுள்ளது. (உ)

# 8 கோடி பணத்துடன் சிக்கிய இளம் ஜோடி

மத்திய கிழக்கு நாடுகளுக்குச் சட்டவிரோதமாக வெளிநாட்டு நாணயத் தாள்களை கொண்டு செல்ல முயற்சித்த போது இருவர் கைது செய்யப்பட்டுள் ளனர். டுபாயை நோக்கி செல்ல முயற்சித்த இருவரும் இலங்கை சுங்கத்துறை அதிகாரிகளால் நேற்று மாலை கைதுசெய்யப் பட்டனர். அவர்களிடம் இருந்து 88 மில்லியன் ரூபா பெறுமதியான உள்நாட்டு மற் றும் வெளிநாட்டு நாணய தாள் கள் கைப்பற்றப்பட்டன.
தெமட்டகொடை பகுதியைச் சேர்ந்த 22 வயது மதிக்கத்தக்க பெண்ணும் 24 வயது மதிக்கத் தக்க ஆணும் குறித்த நாணயத் தாள்களை சட்டவிரோதமாக கடத்த முயற்சித்ததாகத் தெரி விக்கப்பட்டுள்ளது. (உ)

# நேபாளப் பிரதமருடன் மைத்திரி சந்திப்பு



ஐக்கிய நாடுகள் சபையின் 72ஆவது பொதுச்சபைக் கூட்டத்தொட ரில் பங்குபற்றுவதற்காக அமெ ரிக்காவின் நியூயோர்க் நகரத் துக்கு பயணம் மேற்கொண்டுள்ள ஜனாதிபதி மற்றும் நேபாளப் பிரதமருக்குமிடையிலான சந் திப்பு நேற்று இரவு இடம்பெற் றது. இந்தச் சந்திப்பின்போது சார்க் அமைப்பின் நடவடிக்கை கள் தொடர்பில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் அர்ப்பணிப்பு சிறப்பானதென் றும் அது தொடர்பில் அனைத்து சார்க் நாடுகளினதும் நன்றியை அவருக்குத் தெரிவிப்பதாகவும் நேபாளப் பிரதமர் ஷேர் பகதூர் துபா தெரிவித்துள்ளார்.
இதன்போது குறிப்பிட்ட ஜனாதிபதி தெற்காசிய செயற் பாடுகள் தொடர்பில் இணைந்து செயற்படுவதற்காக பொது அமைப் பான சார்க் அமைப்பின் செயற் பாடுகளை தொடர்சியாக முரண் பாடுகளின்றி முன்னெடுக்க வேண் டியதன் தேவையைச் சுட்டிக்காட்டி னார். சார்க் அமைப்பின் செயற் பாடுகளைப் பலப்படுத்துவது தொடர்பில் தாம் இந்தியா மற் றும் பாகிஸ்தான் தலைவர்களின் சந்திப்பின் போது கலந்துரையா டியதாகவும் குறிப்பிட்டார். (உ)

# கொடூர ஆட்சியை முடித்தவர் சந்திரிகா!

"முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க, கடந்த கொடூர ஆட்சியை முடி வுக்குக் கொண்டுவருவதில் மிக வும் முக்கிய பங்கு வகித்தவர். அவரின் செயற்பாடுகள் இன, மத மற்றும் மொழி வேறுபாடு களின்றி அனைத்து மக்களையும் ஒற்றுமைப்படுத்துவதுடன், சமா தானத்தை நோக்கியதாக அமைந் துள்ளது" என்று, அம்பாறை மாவட்ட தமிழ்த் தேசியக் கூட்ட மைப்பின் நாடாளுமன்ற உறுப் பினர் க.கோடீஸ்வரன் தெரிவித் தார். முன்னாள் ஜனாதிபதி சந் திரிகா பண்டாரநாயக்க குமார துங்கவின் அம்பாறை மாவட் டத்துக்கான பயணத்தை யொட்டி, ஆலையடிவேம்பு பனங்காட்டுப்பிரதேசத்தில் நேற்று நடைபெற்ற வைபவத்தில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். (உ)

# பாதுகாப்பு அதிகாரிகளின் துப்பாக்கிகள் திருட்டு

வில்கமுவ பொலிஸ் பிரிவுக்குட்பட்ட வஸ்கமுவ தேசிய வனத்தில் பணியாற்றும் வனப் பாதுகாப்பு அதிகாரிகளுடைய அறையில் இருந்து சில ஆயு தங்கள் காணாமல் போயுள்ளதாகத் தெரிவிக்கப் பட்டுள்ளது. அறையின் கதவு உடைக்கப்பட்டு இந்த ஆயுதங்கள் திருடப்பட்டுள்ளதாகத் தெரி விக்கப்படுகிறது. ரி-56 ரக துப்பாக்கி உட்பட வேறு 4 ஆயுதங்களும் காணாமல் போயுள்ளதாக பொலிஸ் பேச்சாளர் தெரிவித்துள்ளார். நேற்று இரவு இச்சம்பவம் இடம்பெற்றுள்ளதாகவும், மொத் தமாக 5 ஆயுதங்கள் திருடப்பட்டுள்ளதாகவும் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட் டுள்ளது. சந்தேகநபர்கள் தொடர்பில் இதுவரை அடையாளம் காணப்படாத நிலையில், இது தொடர்பான விசாரணைகள் முன்னெடுக்கப் பட்டு வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ)

## நாளை நாளும் கோளும்

23.09.2017 சனிக்கிழமை ஏவிளம்பி வருடம் புரட்டாதி மாதம் 07 ஆம் நாள்
திருதியை மு.ப. 11.55 வரை | சுவாதி பி.இ. 03.35 வரை | அமிர்தசித்தயோகம் | சதுர்த்திவிரதம்
இராகுகாலம் 09.02 - 10.32 | சுபநேரம் 03.02 - 03.32 | எமகண்டம் 01.32 - 03.02

| மேஷம் | ரிஷபம் | மிதுனம் | கடகம் | சிம்மம் | கன்னி | துலாம் | விருச்சிகம் | தனுசு | மகரம் | கும்பம் | மீனம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| ஆதரவு | பாராட்டு | நிம்மதி | முயற்சி | வெற்றி | தனம் | உதவி | ஊக்கம் | ஆக்கம் | மேன்மை | ஓய்வு | நம்பிக்கை |

## அந்த நாள் ஞாபகம்......!




## 1995.09.22

யாழ்.நாகர்கோயில் பாடசாலை மீது இலங்கை விமானப்படையினர் நடத்திய குண்டுவீச்சில் 30 மாணவர்கள் கொல்லப்பட்டனர்.

### கொடியேற்றம்



வண்ணை ஸ்ரீ வேங்கட வரதராஜப்பெருமாள் ஆலயத்தில் மஹோற்சவம் இன்று மு.ப. 10 மணியளவில் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது.

### மட்டு.அம்பாறையில் திடீர்ச் சோதனை

# 18 பேர் சந்தேகத்தில் கைது



நாடு முழுவதும் குற்றச் செயல்களைக் கட்டுப்படுத்தும் பொலிஸ் மா அதிபரின் பணிப்புரைக்கமைய மட்டக்களப்பு அம்பாறை மாவட்ட நகர் பிரதேசத்தில் இடம்பெற்ற திடீர் வீதிச் சோதனை நடவடிக்கையில் 18 பேரைச் சந்தேகத்தில் கைது செய்துள்ளதாக அம்பாறை, மட்டக்களப்பு நகர் பொலிஸார் தெரிவித்தனர்.

பொலிஸாரின் திடீர்ச் சோதனை நடவடிக்கை நேற்று நள்ளிரவு 12 மணி தொடக்கம் அதிகாலை 5 மணி வரை இடம்பெற்றது. இதன் போது மட்டக்களப்பு நகர் பிரதேசத்தில் சந்தேகத்துக்கு இடமாக நடமாடிய 7 பேரை, நீதிமன்ற பிடியாணை பிறப்பிக்கப்பட்டு தலைமறைவாகி இருந்து வந்த 4 பேரையும் கைது செய்துள்ளதாக மட்டக்களப்பு தலைமையகப் பொலிஸார் தெரிவித்தனர்.

அதேவேளை, அம்பாறை நகர் பிரதேசத்தில் இடம்பெற்ற திடீர் சோதனை நடவடிக்கையின் போது சந்தேகத்துக்கு இடமாக நடமாடிய 4 பேரையும், வடிசாரயத்துடன் ஒருவரையும், மது போதையில் அமைதிக்கு பங்கம் விளைவித்த ஒருவரையும், மதுபோதையில் வாகனம் செலுத்திய ஒருவரையும் கைது செய்துள்ளதாக அம்பாறை தலைமையகப் பொலிஸார் தெரிவித்தனர். (உ)

### அருட்தந்தை இமானுவேல்

## அமெரிக்கத் தூதருடன் சந்திப்பு

குளோபல் தமிழ் போராம் அமைப்பின் தலைவர் அருட்தந்தை இமானுவேல் இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் அதுல் கேசப்பை சந்தித்து பேச்சு நடத்தியுள்ளார். புலம்பெயர் அமைப்புக்களுக்கு விதிக்கப்பட்டிருந்த தடை தளர்த்தப்பட்டதன் பின்னர் முதல் தடவையாக அருட்தந்தை இமானுவேல் இலங்கைக்கு பயணம் செய்துள்ளார். யாழ்ப்பாணத்துக்கும் அருட்தந்தை இமானுவேல் பயணம் செய்திருந்தார். அருட்தந்தை இமானுவேலை சந்தித்தமை மகிழ்ச்சி அளிப்பதாக அமெரிக்கத் தூதுவர் கேசப் தெரிவித்துள்ளார். மகிந்த அரசினால் குளோபல் தமிழ் போராம் உள்ளிட்ட புலம்பெயர் அமைப்புக்கள் மற்றும் நபர்களுக்கு எதிராக தடை விதிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. பயங்கரவாதத்துக்கு ஆதரவளிப்பதாக அருட்தந்தை மீது குற்றம் சுமத்தப்பட்டதனைத் தொடர்ந்து அவர் 1997ஆம் ஆண்டு முதல் புலம்பெயர்ந்து வெளிநாட்டில் வாழ்ந்து வருகின்றார். (உ)

## குப்பை கொட்ட தடை நீடிப்பு

முத்துராஜவெல சரணாலயப் பகுதியில் குப்பைகளைக் கொட்டுவதற்கு விதித்திருந்த இடைக்காலத் தடையுத்தரவை, நவம்பர் 2ஆம் திகதி வரை நீடித்து, உயர்நீதிமன்றம், நேற்று உத்தரவிட்டது. கொழும்பு மாநகரில் சேகரிக்கப்படும் குப்பைகளை முத்துராஜவெல சரணாலயப் பகுதியில் கொட்டுவதற்குத் தடை உத்தரவு பிறப்பிக்குமாறும் கோரி, முத்துராஜவெல சரணாலயத்தை அண்மித்து வசிக்கும் 35 குடியிருப்பாளர்களால், உயர் நீதிமன்றத்தில், அடிப்படை உரிமை மனுவொன்று தாக்கல் செய்யப்பட்டிருந்தது. அந்த மனு, நீதியரசர்களான புவனே அலுவிஹார, பிரியந்த ஜயவர்தன ஆகியோரடங்கிய குழாம் முன்னிலையில் எடுத்துக்கொள்ளப்பட்டபோதே, கொழும்பு மாநகர சபைக்குப் பிறப்பிக்கப்பட்டிருந்த இடைக்காலத் தடையுத்தரவு நீடிக்கப்பட்டது. (உ)

# ஊழியர் தாக்கப்பட்டதைக் கண்டித்து ஆர்ப்பாட்டம்



மட்டக்களப்பு மாநகரசபை ஊழியர் தாக்கப்பட்டதைக் கண்டித்தும் தாக்கியவரைக் கைதுசெய்யுமாறு கோரியும் மாநகரசபை ஊழியர்களால் ஏற்பாடு செய்யப்பட்ட ஆர்ப்பாட்டப் பேரணி, மட்டக்களப்பு நகரில் இன்று இடம்பெற்றது.

கடந்த மூன்று வாரகாலமாக, மாநகரசபையின் திருப்பெருந்துறை திண்மக்கழிவு முகாமைத்துவ நிலையத்தில் கழிவுப் பொருட்களைக் கொட்டுவதற்கு மட்டக்களப்பு நீதவான் நீதிமன்றத்தால் இடைக்காலத் தடையுத்தரவு பிறப்பிக்கப்பட்ட நிலையில், கடந்த புதன்கிழமை குறித்த தடை தற்காலிகமாக நீக்கப்பட்டிருந்தது.

இதனையடுத்து, மாநகரசபையால் சேகரிக்கப்பட்ட கழிவுகளை முகாமைத்துவம் செய்வதற்கு நேற்று சென்ற போது, அப்பிரதேச மக்கள் நீதிமன்ற உத்தரவை மீறி, கழிவுகளைக் கொட்டவிடாது தடுத்தோடு, ஊழியர் ஒருவர் மீது தாக்குதலும் நடத்தினர். தாக்குதலுக்குள்ளான ஊழியர் வி.ஜெயராஜ் தலையில் காயமேற்பட்டு மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார். அவரைத், தாக்கியவரைக் கைதுசெய்து சட்டத்தின் முன்நிறுத்துமாறு கோரியே மாநகர சபையினர் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். (உ)

## பொதுச்சபைக் கூட்டம்

கிளிநொச்சி பனை, தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தின் பொதுச்சபைக் கூட்டம் நாளை நடைபெறவுள்ளதாக அந்த சங்கத்தின் பொது முகாமையாளர் எஸ். துரைசிங்கம் தெரிவித்துள்ளார். குறித்த கூட்டம் கிளிநொச்சி பனை, தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தின் புதிய நிர்வாக சபை தெரிவுக்காக நடத்தப்படவுள்ளதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார். கிளிநொச்சி பனை, தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தின் தலைவர் கனகையா மதனரூபன் தலைமையில் ஏ9 வீதி, கரடிப் போக்குச் சந்தி, கிளிநொச்சியில் அமைந்துள்ள சங்கத்தின் பிரதான தலைமைக் காரியாலய மண்டபத்தில் மு.ப. 11 மணிக்கு குறித்த கூட்டம் நடைபெறவுள்ளது. (உ)

### அமைச்சர் ஹக்கீமின்

# தாயார் மரணம்



ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவரும் அமைச்சருமான ரவூப் ஹக்கீமின் தாயார் உதுமாலெப்பை ஹாஜரா ரவூப் தனது 89 ஆவது வயதில் இன்று காலமானார். அவர் கொழும்பு முஸ்லிம் மகளிர் கல்லூரியின் இளைப்பாரிய பிரதியதிபர் என குறிப்பிடப்பட்டுள்ளது. அன்னாரின் உடல் கொள்ளுப்பிட்டி, அல்பேட் பிரேஸிலுள்ள அமைச்சர் ரவூப் ஹக்கீமின் வாசஸ்தலத்தில் வைக்கப்பட்டுள்ளது. நாளை காலை 10 மணிக்கு கொழும்பு 07, ஜாவத்தை ஜும்ஆ பள்ளிவாச லில் உடல் நல்லடக்கம் செய்யப்படும் என குடும்பத்தினர் தெரிவித்தனர். (உ)

### முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

**யோசிதவின்...** (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

குறித்த வழக்குத் தொடர்பாக டெய்ஸியின் வாக்குமூலம் ஒன்று அவசியம் என கருதிய எப்.சி.ஐ.டி கொழும்பு பிரதான நீதவானிடம் மனு ஒன்றை சமர்ப்பித்தது குறித்த மனுவை ஆராய்ந்த நீதவான் இன்று மேற்கண்டவாறு உத்தரவு பிறப்பித்துள்ளார். (எ)

**தேசிய...** (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விளையாட்டு விழாவின் இறுதி நிகழ்வில் விவசாய அமைச்சர் துமிந்த திசாநாயக்க மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சர் பி.ஹரிசன், சிறுவர் மற்றும் மகளிர் விவகார அமைச்சர் சந்திராணி பண்டார ஆகியோர் தலைமையில் நடைபெறவுள்ளது . இவ்விளையாட்டு விழாவின் போது அனுராதபுர சல்காது விளையாட்டு மைதானத்தில் 'யுத்மேளா' கல்வி வர்த்தகக் கண்காட்சி இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (எ)

**ஒன்றுடன்...** (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இதன்போது பின்னால் இரு டிப்பர்கள் வந்துள்ளன. அதில் மூன்றாவதாக வந்த டிப்பர் இரண்டாது டிப்பர் மீது மோதி விபத்துக்குள்ளானது. இதன்போது இரண்டாவதாக வந்த டிப்பரும் பொலிஸாரினால் சோதனைக்கு உட்படுத்தப்பட்டிருந்த முதலாவது டிப்பருடன் மோதியது. இதன்போது படுகாயமடைந்த இரு டிப்பர் சாரதிகளும் கிளிநொச்சி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இதன்போது மூன்று டிப்பர் வாகனங்களும் பலத்த சேதமடைந்துள்ளன. விபத்துத் தொடர்பான மேலதிக விசாரணைகளை கிளிநொச்சிப் பொலிஸார் மேற்கொண்டுவருகின்றனர். (எ-11)

**ஜனவரியில்...** (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சபைத் திருத்தச்சட்ட மூலத்தைக் கொண்டு வந்தோம். எதிர்காலத்தில் அனைத்து வகையான தேர்தல்களும், புதிய தேர்தல் முறையிலேயே நடத்தப்படும் என்பதை நான் திட்டவட்டமாகக் கூறிக்கொள்ள விரும்புகிறேன்" என்றார். (எ)

**அர்ஜுன...** (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

காலத்தில் அவர் உபயோகித்த இரண்டு கையடக்கத் தொலைபேசிகளின் தகவல்கள் இல்லாத 11 மாத காலம் சம்பந்தமான ஆவணங்களை இன்று 12 மணிக்கு முன்னர் சமர்ப்பிக்குமாறு ஆணைக்குழு அர்ஜுன மகேந்திரனிடம் கோரியிருந்தது. (உ)

இப்பத்திரிகை சிவஞானம் ஜெயானந்தனால் பருத்தித்துறை வீதி, 5ஆம் கட்டை, கோப்பாய் மத்தி, கோப்பாய் என்ற முகவரியிலுள்ள நாவலர் அச்சகத்தில் 22.09.2017 அன்று அச்சிட்டு வெளியிடப்பட்டது.